பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 07 2024 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

- பிரதமர் திரு நரேந்திரமோடி தமது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இரவு ஆஸ்திரியா சென்றடைந்தார்.
- விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.
- தமிழக அரசின் ஒருநாள் சுற்றுலா பயண திட்டத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு ராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.
- தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்திற்கான மத்திய சுகாதார அமைச்சகத்தின் முதன்மை ஆலோசகராக டாக்டர் சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி தமது ரஷ்ய பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இரவு ஆஸ்திரியா சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அந்நாட்டு அரசின் தலைவர் திரு கரீன் கேமர், பிரதமரை வரவேற்றார்.

பிரதமருக்கு ராணுவ அணுவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

அவருடன் திரு நரேந்திரமோடி இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

இது குறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஆஸ்த்திரிய தலைவர்களுடனான தமது சந்திப்பை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும், அந்நாட்டுடனான இந்தியாவின் நட்புறவு எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவிலான ஒத்துழைப்புக்கு இந்தியாவும் - ஆஸ்திரியாவும் தொடர்ந்து பணியாற்றும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த பயணம் தமக்கு சிறப்பு வாய்ந்ததாகும் என்றும், ஆஸ்திரியாவுடன் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது தொடர்பாக தாம் பேச்சு நடத்த இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அங்குள்ள இந்திய சமூகத்தினரையும் தாம் சந்தித்து கலந்துரையாட இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

41 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய பிரதமர் ஒருவர் ஆஸ்திரியா சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக மாஸ்கோவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு ரஷ்யாவின் உயரிய விருதான **'St. Andrew the apostle** விருது வழங்கப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையேயான குறிப்பிட்ட நல்லுறவுகளை மேம்படுத்துவதற்கு பிரதமர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில் இந்த விருதை அந்நாட்டு அதிபர் திரு விளாடிமிர் புட்டின், திரு நரேந்திரமோடிக்கு வழங்கி கௌரவித்தார்.

ரஷ்ய அதிபருடனான தமது இந்த சந்திப்பின் மூலம் எதிர்காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவுகள் மேலும் வலுவடையும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைனுடனான போரை முடிவுக்குக் கொண்டுவர தீர்வு காண்பதற்கு பிரதமர் எடுத்து வரும் முயற்சிகளுக்காக ரஷ்ய அதிபர் திரு புட்டின் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

கடந்த பத்து ஆண்டுகளில் இரு தலைவர்களும் 17 முறை சந்தித்து பேச்சு நடத்தி உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

காதி மற்றும கிராம தொழில்கள் நிறுவனத்தின் விற்பனை கடந்த நிதி ஆண்டில் முதல் முறையாக ஒரு லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக நடைபெற்றிருப்பதாக அதன் தலைவர் திரு மனோஜ்குமார் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2023-14-ஆம் நிதியாண்டில் காதி பொருட்கள் விற்பனை 31 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இருந்ததாகக் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு காதி பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் புதிய வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் புதிய சாதனையை படைத்திருப்பதாக திரு மனோஜ்குமார் தெரிவித்தார்.

[]<<<>>>[]

பிரதமரின் ஸ்வநிதி, விஸ்வகர்மா உள்ளிட்ட திட்டங்களின் கீழ் அதிக அளவிலான கடன்களை வழங்குமாறு தனியார் வங்கிகளை நிதி அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

நிதி சேவைகளுக்கான செயலாளர் திரு விவேக் ஜோஷி தலைமையில் தனியார் வங்கிகளின் நிர்வாகிகளுடன் நேற்று புதுதில்லியில் நடைபெற்ற ஆலோசனையின்போது இது குறித்து அறிவுறுத்தப்பட்டது.

மத்தி.ய அசு திட்டங்களின் கீழ் அதிக கடன் வழங்குவதால் திறன்மிக்க கலைஞர்கள், நடைபாதை வியாபாரிகள் உள்ளிட்ட ஏழை மக்கள் பயன்பெறுவார்கள் என்று அப்போது திரு விவேக் ஜோஷி தெரிவித்தார்.

[]<<<>>>[]

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்திற்கான மத்திய சுகாதார அமைச்சகத்தின் முதன்மை ஆலோசகராக டாக்டர் சௌமியா சுவாமிநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காசநோய் ஒழிப்பு திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை டாக்டர் சௌமியா சுவாமிநாதன் வழங்குவார் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசநோய் ஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை, அதற்குத் தேவையான வழிமுறைகள், கொள்கை தொடர்பான முடிவுகள், காசநோய் ஒழிப்புத் திட்ட இலக்கை எட்டுதல் போன்ற விஷயங்களில் ஆலோசனை வழங்குவார் என அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உலக சுகாதார அமைப்பின் முன்னாள் தலைமை விஞ்ஞானியாகவும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநராகவும் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் பணியாற்றியுள்ளார்.

[]<<<>>>[]

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

காலை ஏழு மணிக்கு தொடங்கி மாலை ஆறு மணி வரை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

வாக்குச்வாடிகளில் வாக்காளர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்டவை செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேஷ் ) -44--- செகண்ட்*

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகினறன.

இந்த தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திமுக-வைச் சேர்ந்த புகழேந்தி உயிரிழந்ததை அடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

[]<<<>>>[]

தமிழக அரசின் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டு வரும் ஒருநாள் சுற்றுலா தொகுப்பு பயணங்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவகங்கள், படகுக் குழாம்கள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை சுற்றுலாத்துறை வழங்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

சென்னை – மாமல்லபுரம் இடையே ஒருநாள் சுற்றுலா சேவை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாகவும், இதேபோல் பாண்டிச்சேரி, காஞ்சிபுரம் போன்ற இடங்களுக்கும் சுற்றுலாத்துறை சார்பில் பயணத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் தொடங்கி வைக்கப்பட்ட புதிய பேருந்துகள் மூலம் மக்கள் இந்த சுற்றுலா தொகுப்பு திட்டங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு திரு ராமச்சந்திரன் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று வேளாண்துறை அதிகாரிகளை அத்துறையின் முதன்மை செயலாளர் செல்வி அபூர்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வேளாண்துறை அதிகாரிகள் கூட்டத்தில் பேசிய அவர், ஓசூர், சூளகிரி, தளி, தேன்கனிக்கோட்டை போன்ற பகுதிகளில் பயிர் சாகுபடியை அதிகரிக்க ஏதுவாக விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று கூறினார்.

அவர்களுக்கு அரசின் திட்டங்கள் தடையின்றி கிடைப்பதை அதிகாரிகள் உறுதி செய்திட வேண்டுமென்றும் செல்வி அபூர்வா அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

தமிழக அரசின் வனத்துறை சார்பில் மாநிலம் முழுவதும் பொதுமக்கள் பொழுது போக்கிற்காக 100 இடங்களில் மரகத பூஞ்சோலைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஒரு பகுதியாக நாமக்கல் மாவட்டத்தில் ஐந்து இடங்களில் தலா 25 லட்சம் ரூபாய் செலவில் மரகத பூஞ்சோலைகள் அமைக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - கண்ணன் ) -41---- செகண்ட்*

**[]<<<>>>[]**

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் உள்ள பள்ளி மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பெண்கள் குழந்தைகள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.

**[]<<<>>>[]**

வாஷிங்டனில் நாளை நடைபெறும் 75-வது நாட்டோ உச்சி மாநாட்டின்போது உக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கியை அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

[]<<<>>>[]

காலிஸ்தான் ஆதரவு அமைப்பான எஸ் எப் ஜே அமைப்புக்கான தடையை மத்திய அரசு மேலும் ஐந்து ஆண்டுகள் நீட்டித்துள்ளது.

[]<<<>>>[]

நீட் தேர்வு முறைகேடு தொடர்பான வழக்கில் மேலும் இரண்டு பேரை சிபிஐ கைது செய்துள்ளது.

[]<<<>>>[]

ஆந்திர மாநில மின்சார துறை தொடர்பான வெள்ளை அறிக்கையை அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு நேற்று அமராவதியில் வெளியிட்டார்.

[]<<<>>>[]

சத்திஷ்கர் மாநிலம் காங்கர் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் பெண் மாவோயிஸ்ட் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்,

[]<<<>>>[]

தமிழகத்தில் 18 ஐ பி எஸ் அதிகாரிகள் பதவி உயர்வு மற்றும் பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

[]<<<>>>[]

காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது தொடர்பான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு கூட்டம் இம்மாதம் 29-ஆம் தேதி நடைபெறவுள்ள ஆணையர் திரு செந்தில்முருகன் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக ஊரகப் பகுதிகளில் 526 கிராம ஊராட்சிகளில் மூன்று கட்டமாக 78 முகாம்கள் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு பிரபு சங்கர் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டையில் நடத்தப்பட்டு வரும் செயல்படும் சிறப்பு குழந்தைகளுக்கான பயிற்சி வகுப்பினை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் நேற்று ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக முன்னாள் வீரர் கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சமூக வலைளத்தில் இதனை தெரிவித்துள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலாளர் திரு ஜெய் ஷா, ஏற்கனவே இப்பொறுப்பிலிருந்த ராகுல் டிராவிட்டுக்கு பதில் கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

தென்னாப்பிரிவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டுவெண்டி –டுவெண்டி மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா பத்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை சமன் செய்தது.

சென்னையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த தென்னாப்பிரிக்கா 17 புள்ளி ஒரு ஓவரில் 84 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

85 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்திய மகளிர் அணி பத்து புள்ளி ஐந்து ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி வெற்றை இலக்கை எட்டியது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் முதல் போட்டியில் தென்னாப்பிரிக்கா வெற்றி பெற்ற நிலையில், இரண்டாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.

[]<<<>>>[]

குரேஷியாவில் நடைபெறும் சூப்பர் யூனைடெட் ராப்பிட் மற்றும் ப்ளிட்ஸ் செஸ் போட்டியில் இந்தியாவின் இளம் வீரர் தொம்மராஜூ குகேஷ் பங்கேற்கிறார்.

**[]<<<>>>[]**